

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தெற்கு பகுதியில் கிணார் ஊராட்சியில் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை நடைபெற்றது. இதில் காஞ்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. மதுராந்தகம் தொகுதி பார்வையாளர் எம்.டி.ஆர்.சாரதி மணிமாறன், மதுராந்தகம் தெற்கு ஒன்றிய செயலாளர் பொன் சிவகுமார் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் தொண்டர் அணி

## கரூர் மாவட்ட துணை அமைப்பாளர் - சமூக வலைதள பொறுப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மகளிர் தொண்டர் அணிச் செயலாளர் நாமக்கல் ப.இராணி அறிவிப்பு**

கரூர் மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி எம். ராஜேஸ்வரி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக, **திருமதி சோ.வீரமணி** (70, பகவதியம்மன் கிழக்கு தெரு, கவண்டன்பட்டி, நெய்தலூர் அஞ்சல், குளித்தலை வட்டம், கரூர் மாவட்டம் - 639 110.) கரூர் மாவட்ட மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளராகவும்;

கரூர் மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி கே.உத்திரமணி அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திருமதி வேதவள்ளி** (தெற்கு தெரு, தரகம்பட்டி & அஞ்சல், கடவூர் வட்டம், கரூர் மாவட்டம் - 621 311) அவர்கள் கரூர் மாவட்ட மகளிர் தொண்டர் அணி சமூக வலைதள பொறுப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார்கள்.

ஏற்கனவே நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணாஅறிவாலயம்"** | **நாமக்கல் ப.இராணி** |
| சென்னை - 18. | செயலாளர், |
| நாள் : 12-07-2025 | தி.மு.க. மகளிர் தொண்டர் அணி |



'ஓரணியில் தமிழ்நாடு' புதிய உறுப்பினர்கள் சேர்க்கை முகாம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் நடைபெற்று வருகிறது. இந்நிலையில் இரா.கி.பேட்டை மேற்கு ஒன்றியம் தாமனேரி ஊராட்சி சேதுவராகபுரம் கிராமம் வாக்குச் சாவடி 149 பகுதியில் மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ் சந்திரன் எம்.எல்.ஏ. வீடு வீடாக சென்று உறுப்பினர் சேர்க்க பணியில் ஈடுபட்டார். அப்போது திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் மக்கள் நல திட்டங்கள் தொடர அதிமுக குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் ஓரணியில் தமிழ்நாடு இணையதள உறுப்பினர் சேர்க்கை மூலம் திமுகவில் தங்களை இணைத்துக் கொண்டனர் உடன் ஒன்றிய கழக பொறுப்பாளர் மா.ரகு. திலகவதி ரமேஷ், எஸ். குமரன், சித்திக் அலி, ரேணுத்குமார் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### திரு.வி.க. நகர் மண்டலம் - வார்டு 74-ல்

# குழந்தைகள் மையக் கட்டடம் - பல்நோக்கு மையக் கட்டடம் - உடற்பயிற்சிக் கூடம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு திறந்து வைத்தார்!

சென்னை, ஜூலை 13-

இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (12.07.2025) திரு.வி.க.நகர் மண்டலம், வார்டு74 ல் குழந்தைகள் மையக் கட்டடம், பல்நோக்கு மையக் கட்டடம் மற்றும் உடற்பயிற்சிக் கூடத்தினை பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின் படி, இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (12.07.2025) திரு. வி.க. நகர் மண்டலம், வார்டு74, சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.40 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட குழந்தைகள் மையக் கட்டடத்தினைப் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.32.90 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பல்நோக்கு மையக் கட்டடத்தினையும், சந்திரயோகி சமாதி சாலையில் ரூ.9.87 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்களுடன் கூடிய உடற்பயிற்சிக் கூடத்தினையும் அமைச்சர் பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில், மேயர் திருமதி ஆர்.பிரியா, மத்திய வட்டார துணை ஆணையர் எச்.ஆர். கௌஷிக், மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### சென்னை வடக்கு மாவட்ட

# வர்த்தகர் அணி அமைப்பாளர் கூல் பாய்ண்ட் பா.பிரகாஷ் இல்ல மணவிழா வரவேற்பு!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு – ஆர்.டி.சேகர் – மேயர் பிரியா – கலாநிதி வீராசாமி – கவிஞர் காசிமுத்து மாணிக்கம் வாழ்த்துரை!



சென்னை, ஜூலை 13-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துக்களுடன் சென்னை வடக்கு மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் கூல் பாய்ண்ட் பா.பிரகாஷ் அவர்களின் மைத்துனர் ஆர்.மனோகரன் - திருமதி. எம்.பரிமளா அவர்களின் மகன் சந்தோஷ்குமார் - சுதேவதா திருமண வரவேற்பு விழா இன்று (13.07.2025 - ஞாயிற்றுக்கிழமை) மாலை 6.00 மணிக்குமேல் பட்டுமேடு நாடார் சங்க ஐக்கிய சங்கம் திருமண மண்டபம், ஜி. கே.எம்.காலனி, பெரியார் நகர், கொளத்தூரில் நடைபெறுகிறது.

விழாவில் சென்னை கிழக்கு மாவட்டச் செயலாளர் - இந்து சமய அறநிலையத் துறை - சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அமைச்சருமான பி. கே.சேகர்பாபு, சென்னை வடக்கு மாவட்ட கழகப் பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ., மேயர் பிரியாராஜன், டாக்டர்.கலாநிதிவீராசாமி எம். பி., கவிஞர் காசிமுத்து மாணிக்கம், மாதவரம் எஸ்.சுதர்சனம், ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ., தா.இளையஅருணா எம்.சி., இரா.கருணாநிதி, பி. டி.பாண்டிச்செல்வம் ஆகியோர் பங்கேற்று மணமக்களை வாழ்த்துகின்றனர்.

மேலும் இரா.நரேந்திரன், க.ஜெயராமன், அ. முருகன், ஐசிஎப்.வ. முரளிதரன், ஏ.ஆர்ஆர். மலைச்சாமி எம்.சி., ந.சர்வஜெயதாஸ் எம்.சி., க.சர்மிளா காந்தி எம்.சி., சி.ஆனந்தி எம்.சி., எஸ்.சாக்ரடீஸ், வட்ட கழகச் செயலாளர்கள் : க.பாபு, ஜி.மாரிமுத்து, த.ஆறுமுகம், எஸ்.அருள், கி.தினகரன், வி.மோகன், இரா.அரிதாஸ், மு.உமாபதி, கே.இ.செந்தமிழரசு, சி.எஸ்.இரவி, கார்த்திபன், கே.வி.ராஜன், எம்.பி.டி. அப்துல்ரகுமான், வெ.இன்பரசன்,

கோ.சதீஷ், கே.ஒ.கலையரசன், ஒய்.கௌதமன், ஜி.வி.மோகன்பாபு, த.சிவராமன், ச.சச்சிதாநந்தம், எஸ்.செபஸ்டின், சி.சதீஷ், நா.நடராஜன், டி.வனன்ராஜ், இலாபொன்னரசன் மற்றும் மாவட்ட கழக, பகுதி கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் அனைவரும் கலந்து கொள்கின்றனர்.

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் - எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி சிறப்புரை!

# ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்புப் பணிகள் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் தொகுதிப் பார்வையாளர்கள் - ஒன்றிய, நகர, பேரூர்ச் செயலாளர்கள், தகவல் தொழில் நுட்ப அணி நிர்வாகிகள் அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிவிப்பு!



கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆலோசனை படி 'ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு பணிகள் குறித்து திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் திருவள்ளூர் மற்றும் திருத்தணி தொகுதிகுட்பட்ட பார்வையாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் அவசர ஆலோசனை கூட்டம் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளரும் திருத்தணி சட்டமன்ற உறுப்பினருமான திருத்தணி எஸ்.சந்திரன் எனது தலைமையில் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் முன்னிலையில் சென்னை திருப்பதி தேசிய நெடுஞ்சாலையில் உள்ள திருத்தணி ஜி.ஆர்.டி. ரெசிடெண்சி ஓட்டலில் இன்று 13.07.2025 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெறுகிறது . இதில் சிறப்பு அழைப்பாளராக திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் தமிழ்நாடு சிறுபான்மை நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், கழக கொள்கை பரப்பு செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான டாக்டர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் கலந்து கொண்டு ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு பணிகள் குறித்து ஆலோசிக்க உள்ளார்கள். எனவே மேற்படி ஆலோசனை கூட்டத்திற்கு திருவள்ளூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் தொகுதி பார்வையாளர்கள் ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் மாவட்ட தொகுதி ஒன்றிய நகர பேரூர் தகவல் தொழில்நுட்ப அணிகளின் ஒருங்கிணைப்பாளர் துணை ஒருங்கிணைப்பாளர்கள் தவறாமல் கூட்டத்திற்கு கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்

பொருள் 'ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு பணிகள் குறித்து

**திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ.**
செயலாளர், திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க.

### ஆர்.டி.சேகர் ஆலோசனை வழங்குகிறார் ! ஜே.ஜே.எபினேசர் – இரா.லட்சுமணன் முன்னிலை ! நா.கோதண்டன் தலைமை !

# ஆர்.கே.நகர் 40வது வட்ட நிர்வாகிகள் பாக உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம் !

## கலாநிதி வீராசாமி - கே.வி.லோகேஷ் பங்கேற்பு !

சென்னை, ஜீலை-13

சென்னை வடக்கு மாவட்டம் ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி 40வது வட்ட திமுக சார்பில் (பி.எல்.ஏ2) மற்றும் (பி.எல்.சி) ஆலோசனைக் கூட்டம் இன்று (13.07.2025 ஞாயிற்றுக்கிழமை) மாலை 4.00 மணியளவில் எண் 478/640, திருவெற்றியூர் நெடுஞ்சாலை தண்டையார்பேட்டை சென்னை81 அப்போலோ மருத்துவமனை அருகில் நடைபெறுகிறது.

வட்டச் செயலாளர் நா. கோதண்டன் தலைமை வகிக்கிறார். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, ஆர்.கே.நகர் கிழக்கு பகுதி செயலாளர் இரா.லட்சுமணன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

எம்.எம்.சாமி, டி.ஆர். தணிகாசலம், இரா.சீமான், எம்.எஸ்.ரவி, மு.சா.அரிக்குமார் க.கலா, க.ஹேமத்குமார், டி.விஜயகுமார், ஆர். பத்மநாபன், ஆர்.வெங்கட், எஸ்.எம்.முருகன், என். டேனியல், ஆகியோர் வரவேற்கின்றனர்.

கூட்டத்தில் மாவட்ட கழக பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஆலோசனை வழங்குகிறார்.

நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, தொகுதி பார்வையாளர் கே.வி. லோகேஷ், ஆர்.வெற்றிவீரன், என்.அனிபா, ஆர்.டி. ராஜா, கே.பாலு, மு.வேதலட்சுமி, கே.பி. சதீஷ்குமார், என்.குமாரி எம்.சி, சி . ம ணி க ண் ட ன் , பா.கோதண்டன், என்.பிரேமராசன், எஸ்.கிறிஸ்தவராஜ், பிராங்கிளின், கே.முத்தமிழ்செல்வன், கோ. தமிழ்ச்செல்வன்,டி.பி.ஆர். ராமதாஸ், எஸ்.புவனேஸ்வரி, எஸ்.மஞ்சு, எஸ்.மகினமராஜ், பழனி, என்.லலிதா, இ.வேலு, கு.மனோகரன், எம்.மூர்த்தி, பி.நபிஷா, எஸ்.கலைசெல்வி, ஏ. ஜானகி, ஏ.வசந்தி, ஆர். லெனின்குமார், எஸ். கோமளா, என்.அப்துல்கலாம், பி.ராஜேஷ், ஆர். பார்த்திபன், எம்.ஜெகதீஷ், எஸ். பெரியநாயகிராஜ், ஏ.ஸ்ரீதர், எம்.ராஜ்குமார், எஸ்.அன்பரசு, கு.சரவணன், ஜி.ராஜ்குமார், எஸ். அபூபக்கர், ஜி.மணி கண்டன், கே.வினோத்குமார், ஜி.ஞானபிரகாசம், எஸ். ஸ்ரீதர், ஜி.பிரேம்குமார், க.நரேஷ்குமார்,

எனவே வட்டத்திற்கு உட்பட்டு இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அணிகளின் மாவட்டம் மற்றும் பகுதி நிர்வாகிகள் அனைத்து பாக முகவர்கள் பாக உறுப்பினர்கள் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கமாறு வட்ட செயலாளர் நா. கோதண்டன் கேட்டுக் கொண்டுள்ளார்.

### ரயில்வே கேட் கீப்பரின் அலட்சியமே...

# கடலூர் ரயில் விபத்தில் 3 மாணவர்களின் உயிரிழப்புக்கு காரணம்!

## விசாரணையில் தகவல்!

கடலூர், ஜூலை 13-

கடந்த 8ஆம் தேதி கடலூர் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டில், தனியார் பள்ளி வாகனம் மீது ரயில் மோதிய விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து, கேட் கீப்பர் பங்கஜ் சர்மாவை காவல்துறையினர் கைது செய்து சிறையில் அடைத்தனர்.

இந்த விபத்து குறித்து ரயில்வே ஊழியர்கள் 11 பேருக்கு சம்மன் அனுப்பப்பட்டு விசாரணை நடத்தப்பட்ட நிலையில், நேற்று மேலும் 2 ஊழியர்களிடம் விசாரணை நடத்தப்பட்டது.

இந்த நிலையில் செம்மங்குப்பம் ரயில்வே கேட்டை மூடிவிட்டதாக, ஆலப்பாக்கம் நிலைய அதிகாரியிடம் கேட் கீப்பர் பங்கஜ் சர்மா பொய் கூறியது காவல்துறை விசாரணையில் அம்பலமாகியுள்ளது. ரயில்வே கேட்டை மூடாமல், அதை மூடி விட்டதாக ஆலப்பாக்கம் ரயில் நிலைய அதிகாரிக்கு தகவல் கொடுத்தது கண்டறியப்பட்டுள்ளது.

விபத்து நடைபெற்ற பிறகு, ரயில் நிலைய அதிகாரியை தொடர்புகொண்ட கேட் கீப்பர், கேட்டை மூடவில்லை என்பதை ஒப்புக் கொண்டுள்ளார் என்பது இருவருக்கும் இடையிலான தொலைபேசி உரையாடல் மூலம் தெரிய வந்துள்ளது.

ரயில்வேதுறையின் தானியங்கி தொலைபேசி உரையாடல் பதிவை போலீசார் சேகரித்துள்ளனர். விசாரணையில் கிடைத்துள்ள தகவல் மூலம் விபத்துக்கு கேட் கீப்பரின் அலட்சியமே காரணம் என்பது உறுதியாகியுள்ளது.

### ஆயிரம் விளக்கு தொகுதி தலைமையிடப் பார்வையாளர் சைதை சாதிக் ஆய்வு!

# 108-வது வட்டத்தில் கழக உறுப்பினர் சேர்க்கை!

## வட்டச் செயலாளர் க.சிட்டிபாபு வேண்டுகோள்

சென்னை, ஜூலை 13 -

ஆயிரம் விளக்கு 108-வது வட்டச் செயலாளர் க.சிட்டிபாபு வட்டக் கழகத்தினருக்கு விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:

தமிழக முதல்வர் கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் முன்னெடுப்பில் "ஓரணியில் தமிழ்நாடு" என்ற கொள்கையினை முன்னிறுத்தி கழக உறுப்பினர் சேர்க்கை, இன்று ( 13-07-2025) காலை 10.00 மணியளவில் சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி 109 வது வட்டத்தில் வட்ட செயலாளர் தலைமையில் நடைபெறும் உறுப்பினர் சேர்க்கையினை ஆயிரம்விளக்கு தேர்தல் பார்வையாளர் சைதை சாதிக் கலந்து கொண்டு ஆய்வு செய்ய உள்ளார்.

இந்நிகழ்ச்சியில் ஆயிரம் விளக்கு மேற்கு பகுதி செயலாளர் வினோத் வேலாயுதம் கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். எனவே 109வது வட்டத்தில் உள்ள BLA-2, BDL மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் க.சிட்டிபாபு தெரிவித்துள்ளார்.



ஓரணியில் தமிழ்நாடு கழக தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க சென்னை தென்மேற்கு மாவட்ட செயலாளர் த.வேலு அறிவுறுத்தலின்படி மைலாப்பூர் டும்மிங் குப்பத்தில் , 125 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.ரேவதி தலைமையில் வீடு வீடாக சென்று கழக உறுப்பினர் சேர்க்கும் பணி நடைபெற்றது. உடன் முனுசாமி, செல்வகுமார், டோமினிக், ரத்தினம், அன்பு கபாலி, கழக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. மகளிர் அணி

## கரூர் மாவட்ட துணை அமைப்பாளர் - சமூக வலைதள பொறுப்பாளர் நியமனம்!

**தி.மு.க. மகளிர் அணிச் செயலாளர் ஹெலன் டேவிட்சன் அறிவிப்பு!**

கரூர் மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராக நியமிக்கப்பட்ட திருமதி எஸ்.அனுரேகா அவர்களை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, அவருக்குப் பதிலாக **திருமதி வ.சண்முகவள்ளி** (60/3, அம்மன் நகர், கருப்பகவுண்டன்புதூர் கிழக்கு, பசுபதிபாளையம் அஞ்சல், கரூர் வட்டம் - மாவட்டம் - 639 004.) அவர்கள் கரூர் மாவட்ட மகளிர் அணி சமூக வலைதள பொறுப்பாளராகவும்;

**திருமதி ரா.செந்தாமரைச்செல்வி** (206, மாரியம்மன் கோவில் கடைவீதி, பழையூர் அஞ்சல், மண்மங்கலம் வட்டம், கரூர் மாவட்டம் - 639 004.) அவர்கள் கரூர் மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளராகவும் நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட அணி நிர்வாகிகளுடன் இவர்கள் இணைந்து பணியாற்றுவார்கள்.

| | |
|---|---|
| **"அண்ணாஅறிவாலயம்"** | **ஜெ. ஹெலன்டேவிட்சன்,** |
| சென்னை - 18. | செயலாளர், |
| நாள் : 12-07-2025 | தி.மு.க. மகளிர் அணி |

### 'கலைஞர் கனவு இல்லம்' திட்டம்!

# 1 லட்சம் வீடுகள் இலக்கு விரைவில் நிறைவேறும்!

சென்னை, ஜூலை 13 -

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களால், 2024-25 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்ட கலைஞர் கனவு இல்லம் திட்டம், ஆண்டுதோறும் ஒரு லட்சம் வீடுகளைக் கட்டுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த திட்டத்தில் நடப்பு ஆண்டில், ஆயிரத்து 673 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. 90 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீடுகளுக்கு அடித்தள கட்டடம் நிறைவு பெற்றுள்ளன.

இந்நிலையில், ஏழைகளுக்கான கிராமப்புற வீட்டு வசதிக்கான திராவிட மாடல் அரசின் முதன்மைத் திட்டமான கலைஞர் கனவு இல்லம், சில வாரங்களில் ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட உள்ளது. அதன்படி, திராவிட மாடல் ஆட்சியில் கலைஞர் கனவு இல்லம் திட்டம் ஒரு முக்கிய மைல்கல்லை எட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போதைய நிலவரப்படி, 81 ஆயிரத்து 811 கலைஞர் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு வீட்டின் குறைந்தபட்ச அடித்தளப் பரப்பளவு சமையலறை உட்பட 360 சதுர அடி ஆகும். தகுதியுள்ள நிலமற்ற நபர்களுக்கு தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் பட்டா வழங்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மீஞ்சூர் மேற்கு மாவட்ட பிரதிநிதி ஆ.பாளையம் படத்தினை மாவட்டச் செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே.ரமேஷ்ராஜ் திறந்து வைத்து மலர் அஞ்சலி செலுத்தினார். அருகில் ஒன்றிய கழகச் செயலாளர் ஆ.ராஜா, மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் பாஸ்கர் சுந்தரம், பா.செ.குணசேகரன், பா.து.தமிழரசன், வர்த்தக அணி சுரேஷ், மா.தீபன், முன்னாள் தலைவர் சுரேஷ், முரளி, சரவணன் உள்பட குடும்பத்தினர்கள் நிர்வாகிகள் பலர் உள்ளனர்